தமிழ்நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1973 நவம்பர் 30.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்--விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

செய்யாறு அறிஞர் அண்ணா அரசினர் கல்லூரி

*** 509 வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், செய்யாறு அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரியில் போதிய கட்டட வசதியில்லாமையால் 1973-74-ல் பட்டப் படிப்பு வகுப்புகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பது மறுக்கப்படுகிறது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், மாணவர்களை பட்டப் படிப்பு வகுப்புகளில் சேர்க்கப்படுவது குறித்த நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, செய்யார் அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரியைப்போல் பல்வேறு இடங்களில் பட்ட மேற்படிப்பு துவங்குவதற்கு கட்டட வசதியின்மை காரணமாக மறுக்கப்படுகிறது. இனிமேலாவது அப்படியில்லாமல் எந்தெந்தக் கல்லூரிக்குத் துணைக் கட்டடம் தேவையோ அங்கு கட்டடம் கட்ட அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கிடைத்திருக்கும் நிதி வசதியைப் பொறுத்துத்தான் பல்வேறு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான முயற்சியில்

ஈடுபடுகிறோம். எங்கெங்கு கட்டட வசதி இருக்கிறதோ அங்கு பட்ட மேல்படிப்புக்கு பல்கலைக்கழகம் அனுமதிக்கிறது. ஆகவே, மாநிலத்திலிருக்கும் பல்வேறு கலைக் கல்லூரிகளையும் பார்த்து, எங்கெங்கு அவசியப்படுகிறதோ அந்த இடத்திற்கு, கிடைக்கிற நிதியை ஒதுக்கித்தரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். அதன் விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரக் குறிப்பு தரலாம்.

New building in Guindy Engineering College campus

* 510 *Q.*—THIRU N. DENNIS:
THIRU N. KITTAPPA: Will the Hon.
THIRU K. T. K. THANGAMANI:
the Minister for Education and Tourism be pleased to state whether any enquiry has been ordered into the collapse of the Parabolic roofing of the building of the Guindy Engineering College under construction?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்நிகழ்ச்சிக்கான காரணங்களை ஆராய வல்லுனர் குழு ஒன்று அரசினால் அமைக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

THIRU N. DENNIS: May I know, Sir, whether the negligence in the execution of the work was detected? May I also know the steps that were taken to avoid such negligence?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, முன்னாள் தலைமைப் பொறியாளர் திரு. ஒ. சிவசங்கரன் அவர்கள், ஹைவேஸைச் சேர்ந்த தலைமைப் பொறியாளர் திரு. தில்லைநாயகம் அவர்கள், தலைமைப் பொறியாளர் (ஜெனரல்) திரு. நமசிவாயம் அவர்கள் ஆகியோரைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் விரிவாக ஆராய்ந்து அரசினருக்கு அறிக்கை தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கையை அரசு பரிசீலனை செய்து, மேலும் பல விளக்கங்களைக் கேட்டிருக்கிறது. அந்த விளக்கங்கள் வந்த பிறகு தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா: இந்த கிண்டி பொறியியல் கல்லூரியில் கட்டப்பட்டு வரும் கட்டடத்தில் சாய் வட்ட வடிவக்கூரை சரிந்து விழுந்ததனால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை அறிவிக்க இயலுமா?